**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.701/2023 |
| Deposition of witness for Prosecution | : | P.W–3 |
| Name | : | ஊர்காவல்சாமி, வயது 42 |
| Father Name/Husband Name | : | இருளப்பன் |
| Village | : | மந்தித்தோப்பு |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | கூலி |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22nd day of March 2024.

**(எதிரி ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது மந்தித்தோப்பில் வசித்து கூலி வேலை செய்கிறேன். எதிரியை தெரியும் அவர் தான் விபத்து ஏற்படுத்திய வேனின் டிரைவர். வழக்கில் இறந்த நபர் எனது அக்கா மகன். அ.சா.1 எனது மாமா. கடந்த 30.04.2023 ஆம் தேதி மாலை 05.00–05.30 மணியளவில் கிழவிப்பட்டி அருகே கோவில்பட்டியில் இருந்து தெற்காக போகும் ரோட்டில் இருச்சக்கர வாகனத்தில் நானும் எனது மச்சினர் பரமசிவம் என்பவரும் பரமசிவம் வாகனத்தில் போனோம்.
2. எங்களுக்கு முன்னர் 500 மீட்டர் தொலைவில் வெள்ளைச்சாமி மற்றும் இறந்த நபர் இருச்சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தனர். அப்போது வெள்ளைச்சாமியின் பை கீழே விழுந்ததால் அதனை எடுக்க வண்டியை ஓரமாக நிறுத்திவிட்டு தர்மராஜ் எடுப்பதற்காக ரோட்டிற்கு சென்ற போது அங்கு ஒரு வேன் எதிர்பாராதவிதமாக மோதிவிட்டது.
3. அதில் தர்மராஜ் தூக்கி எறியப்பட்டார். அதில் அவருக்கு தலையில் அடிப்பட்டு மூக்கில் இரத்தம் வந்தது. பின்னர் தனியார் ஆம்புலன்ஸ் மூலம் கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். மருத்துவமனையில் அவர் வரும் வழியில் இறந்துவிட்டதாக சொன்னார்கள். வழக்கு சம்பந்தமாக அ.சா.1 புகார் கொடுத்தார். வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1. இறந்த நபர் ஓட்டியதாக சொல்லும் வண்டி எமகா ரேஸ் பைக்

என்றால் சரிதான். பொதுவாக ரேஸ் மாடல் வண்டிகளுக்கு டேங் கவர் கிடையாது என்றால் சரியல்ல இருந்தது. நிகழ்ச்சிக்கு போனதாக சொல்லியுள்ள நிலையில் மேற்படி நிகழ்ச்சி மாலை நேர நிகழ்ச்சி என்றால் சரியல்ல காலை நேர நிகழ்ச்சி. 12.00 மணிக்கு முடிந்ததா என்றால் இல்லை 01.00 முடிந்தது

2. கோவில்பட்டி – பசுவந்தனை ரோடு என்பது இரண்டு வாகனங்கள் ஒரே நேரத்தில் செல்லக்கூடிய ரோடு என்றால் சரிதான். நீங்கள் மந்தித்தோப்பில் வசித்துவரும் நிலையில் என்ன காரணத்திற்காக செவல்பட்டிக்கு போனீர்கள் என்ற விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.
3. இறந்த நபர் தூத்துக்குடி மாப்பிளையூரணியில் வசிக்கிறார் என்றால் சரிதான். தூத்துக்குடியில் இருந்து கோவில்பட்டிக்கு வருவதாக இருந்தால் மெயின் சாலையின் வழியாக தான் வரவேண்டும் என்றால் சரிதான். போலிசார் விசாரணையின் போது நீங்கள் எந்த எண் கொண்ட வாகனத்தில் சென்றதாக சொன்னீர்களா என்றால் இல்லை.
4. உங்களுக்கு முன்னர் இறந்த நபர் 10, 20 நிமிடங்களுக்கு முன்னர் கிளம்பினார்களா என்றால் 5, 7 நிமிடங்களுக்கு முன்னர் கிளம்பினார்கள். நீங்கள் சம்பவ இடத்திற்கு போன போது விபத்து ஏற்பட்டு ஆட்கள் கூட்டமாக இருந்தார்கள் என்றால் சரிதான். பொதுவாக ஒருசாலையின் குறுக்காக கடக்க வேண்டும் என்றாலும் ஏதாவது பொருள் கீழே விழுந்தால் அதனை எடுக்க செல்வதாக இருந்தாலும் சாலையின் இருபக்கமும் பார்க்க வேண்டும் என்றால் சரிதான்.
5. வண்டியில் இருந்த கீழே விழுந்த பை சடங்கு வீட்டில் கொடுத்த தாம்பூல பை என்றால் சரியல்ல எனது மாமாவின் சட்டை, துணிகள் இருந்தன. போலிசார் விசாரணையில் சம்பவ இடத்தில் விபத்து ஏற்படுத்திய வாகனத்தையும் அதன் ஓட்டுனரையும் பார்த்ததாக நீங்கள் சொல்லவில்லை என்றால் அவர்கள் கேட்கவில்லை நான் சொல்லவில்லை.
6. பரமசிவம் என்பவருக்கு ஊர் அகிலாண்டபுரம் கிராமம் என்று நீங்கள் போலிசார் விசாரணையில் சொன்னீர்களா என்றால் இல்லை செவல்பட்டியை சேர்ந்தவர். இறந்துபோன தர்மராஜின் அப்பா ராதாகிருஷ்ணன் சம்பவம் நடந்த ஒரு மணிநேரத்தில் வந்தாரா என்றால் இல்லை அரை மணிநேரத்திற்குள் வந்துவிட்டார்.
7. கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் வைத்து போலிசார் இறந்த நபரின் அப்பாவிடம் புகார் எழுதி வாங்கினார்கள் என்றால் இல்லை. மாமா வெள்ளைச்சாமியிடம் தான் வாங்கினார்கள். நீங்கள் சொன்னது போல் சொன்ன நேரத்தில் வழக்குசம்பவத்தை நீங்கள் பார்க்கவில்லை என்றால் சரியல்ல.

8. செவல்பட்டி கிராமத்திற்கு நீங்கள் செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கில் இறந்த நபர் உங்கள் அக்கா மகன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.